# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது, திருச்சி)

மணப்பாறை - 621 306

## இளம் வாக்காளர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி அறிக்கை

தேதி : **23.08.2025**

நேரம் : **காலை 11.00 மணி**

இடம் : **இயற்பியல் துணைப்பாட ஆய்வகம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மணப்பாறை - 621 306**

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மணப்பாறை - 621 306 மற்றும் மணப்பாறை வட்ட தேர்தல் அலுவலகம் இணைந்து, இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி இளம் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது. இந்நிகழ்வின் முக்கிய நோக்கம், இளம் தலைமுறையினரை வாக்காளர் பதிவில் ஈடுபடச் செய்வதும், வாக்களிக்கும் பொறுப்புணர்வை வளர்ப்பதுமாகும்.

**தலைமை உரை** : **முனைவர். க. மலர்மதி**, முதல்வர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மணப்பாறை - 621 306.






மாணவர்களுக்கு வாக்காளர் பதிவு செய்யும் நடைமுறை, வாக்களிக்கும் உரிமையின் முக்கியத்துவம், ஒவ்வொரு வாக்கும் நாட்டின் வளர்ச்சிக்கு வைக்கும் பங்களிப்பு ஆகியவை குறித்து வலியுறுத்தப்பட்டன.

**போட்டிகள்**

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, மாணவர்களுக்கான கட்டுரை போட்டி மற்றும் ஓவியப் போட்டி நடத்தப்பட்டன.

**கட்டுரை போட்டி**

**தலைப்பு: "நான் 17 வயது - வாக்காளர் பதிவுக்குத் தாயாராகவும், வாக்களிக்கத் தாயாராகவும் உள்ளேன்"**

**சொல் வரம்பு:** ஆங்கிலத்தில் 300 - 500 சொற்கள், தமிழில் 300 - 600 சொற்கள்.

போட்டியில் மாணவர்களின் சுய சிந்தனையும் தெளிவான கையெழுத்தும் மதிப்பீட்டில் முக்கியத்துவம் பெற்றன.







**ஓவியப் போட்டி**

**தலைப்பு: "இளம் வாக்காளராக நான் கனவு காணும் இந்தியா"**

மாணவர்கள் பென்சில், கலர் பென்சில், கிரேயான், நீர்வர்ணம் போன்றவற்றைப் பயன்படுத்தி ஓவியங்கள் வரைந்தனர். அரசியல்

கட்சிகளைச் சார்ந்த சின்னங்கள், நிறங்கள், லோகோக்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்பதும் கட்டாய விதியாக இருந்தது.

**ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்கள் விவரம்**

| தர வரிசை | மாணவர் பெயர் | வகுப்பு |
|---|---|---|
| 1 | P. பாப்பாத்தி | III BA TAMIL |
| 2 | B. பரமேஸ்வரி | III BA TAMIL |

**தமிழ் கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம்**

| தர வரிசை | மாணவர் பெயர் | வகுப்பு |
|---|---|---|
| 1 | A. நந்தினி | I B.Sc., PHYSICS |
| 2 | M. கனிஷா | I B.Sc., PHYSICS |
| 3 | R. காயத்ரி | II B.Sc., PHYSICS |

மாணவர்கள் பெருமளவில் பங்கேற்று ஆர்வத்துடன் போட்டிகளில் ஈடுபட்டனர். இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு கல்லூரி அளவில் பரிசுகள் வழங்கப்படும். மேலும், அவர்கள் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்க தேர்வு செய்யப்படுவார்கள். அங்கு சிறந்தவர்களுக்கு மாநில அளவிலும் வாய்ப்பு வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சி, இளம் தலைமுறையினரின் ஜனநாயகப் பொறுப்புணர்வை வளர்க்கும் வகையில் சிறப்பாக அமைய, மாணவர்கள் உற்சாகமாக பங்கேற்றனர்.

**தேர்தல் வாக்காளர் ஒருங்கிணைப்பாளர்** **முதல்வர்**